**செ.வெ.எண்:** 82 **நாள் : 23.07.2022**

# **மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி அவர்கள், கோவிட் பூஸ்டர் டோஸ் தடுப்பூசி எடுத்துக் கொள்ள தமிழக மக்களுக்கு வேண்டுகோள்.**

மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி அவர்கள், கோவிட் பூஸ்டர் டோஸ் தடுப்பூசி எடுத்துக் கொள்ள தமிழக மக்களுக்கு வேண்டுகோள் :

"தமிழ்நாட்டை சேர்ந்த என் அன்பான சகோதர, சகோதரிகளே.

கோவிட் தொற்று நோய் இன்னமும் இங்கே உள்ளது என்பது நாம் அனைவரும் அறிவோம். பொதுமக்கள் பலர் இதனால் பாதிக்கப்படுகின்றனர். சிலர் இறந்தும் உள்ளனர். தடுப்பூசி எடுத்துக் கொள்வதே பாதுகாப்பு ஆகும் .

இந்தியா முழுவதும் தீவிரமாக கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணி சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது . இந்தியா முழுவதும் 200 கோடி அளவிலான தடுப்பூசி செலுத்தும் பணி கடந்து உள்ளது .

தொடரும் கோவிட் தொற்றை கருத்தில் கொண்டு, நமது பாரதப் பிரதமரின் தொலைநோக்குப் பார்வை கொண்ட இந்திய அரசு, 18 வயது முதல் 59 வயது வரை உள்ள அனைத்து பொதுமக்களுக்கும் இலவச கோவிட் பூஸ்டர் டோஸ்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஏராளமான சிறப்பு தடுப்பூசி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த சிறப்பு முகாம்கள் நமது இந்திய சுதந்திரத்தின் 75 வது ஆண்டு நினைவாக 75 நாட்கள் நடைபெறுகிறது.

என் அன்பான சகோதர, சகோதரிகளே , நீங்கள் அனைவரும் பாதுகாப்பாக இருக்க வேண்டும்

பூஸ்டர் டோஸ் எடுத்துக் கொண்டு பாதுகாப்பாகவும், ஆரோக்கியமாகவும் இருக்குமாறு உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.”

.................................................................................................................................................

**ஆளுநர் மாளிகை , சென்னை-22** **ஒம்/-**

**23.07.2022** **இணை இயக்குநர் ( ம.தொ )**